# முதலாம் பகுதி

# நிறுத்தலளவையும் முகத்தலளவையும்

## மாற்றற் காரணிகள்

பிரித்தானிய முறையிலிருந்து மெற்றிக் அலகுகட்கு

| | |
|---|---|
| 1 ஏக்கர் | = 0.405 எக்டேயர்கள் (எ. டே) |
| 1 இருத்தல் (இரு) | = 0.454 கிலோ கிறும்கள் (கி.கி.) |
| 1 லோங் தொன் (2240இரு) | = 1.016 மெற்றிக் தொன்கள் (மெ. தொ) |
| 1 அந்தர் (112இரு) | = 50.802 கி.கி |
| 1 மைல் | = 1.609 கிலோ மீற்றர்கள் (கி.மீற்) |
| 1 லோங் தொன் மைல் | = 1.635 மெ. தொன் கி.மீ |
| 1 இரு-ஏக்கரிற்கு | = 1.121 கி.கி/எ.டே |
| 1 புசல் (நெல்) (46இரு) | = 20.87கி.கி |
| 1 அந்தர்-ஏக்கரிற்கு | = 125.536 கி.கி/எ.டே |
| 1 புசல்நெல்-ஏக்கரிற்கு | = 51.572 கி.கி/எ.டே |
| 1 பைந்து | = 0.57 லிற்றர்கள் |
| 1 இம்பீரியல் கலன் | = 4.55 லிற்றர்கள் |

மெற்றிக் முறையிலிருந்து பிரித்தானிய அலகுகட்கு

| | |
|---|---|
| 1 எக்டேயர் | = 2.471 ஏக்கர்கள் |
| 1 கிலோகிறும் | = 2.205 இருத்தல்கள் |
| 1 மெற். தொன் (1000 கி. கி) | = 0.984 லோங்தொன் |
| 1 மீற்றர் | = 3.281 அடி |
| 1 கிலோமீற்றர் | = 0.621 மைல் |
| 1 மெற்றிக் தொன் கிலோ மீற்றர் | = 0.612 லோங் தொன் மைல் |
| 1 லிற்றர் | = 1.76 பைந்துகள் = 0.219 இம்பீரியல் கலன்கள் |
| 1 கி. கி - எக்டேயரிற்கு | = 0.892 இரு / ஏக்கரிற்கு |

LIBRARY

# பொருளாதாரச் செயலாற்றமும், சிக்கல்களும் கொள்கைகளும் - 1979

## முன்னுரை

1979ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் 6.2 சதவீதம் கொண்டதொரு வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தது. இவ்வீதம், 1978ஆம் ஆண்டு நீங்கலாக கடந்த பத்தாண்டுகளில் காணப்பட்ட வீதத்திலும் கூடியதாகும். இந்நிலை, முன்னைய ஆண்டில் ஏற்பட்ட 8.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியிலும் பார்க்கக் குறைவாக இருப்பினும் 1977ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பெரும் பொருளாதார சீர்திருத்தங்களால் உருவாக்கப்பட்ட வளர்ச்சிக்கான உந்துதல்களை இன்னும் இவ் உயர் வீத வளர்ச்சி எடுத்துக்காட்டுவதாகவே உள்ளது. மேலும், சென்றவாண்டைப் போன்றுபொருளாதார வளர்ச்சி கட்டடவாக்கம், சுரங்கமறுத்தல், மின்வலு, நிதியிடல், வர்த்தகம், பணிகள் ஆகியவற்றால் ஏற்பட்ட விரிவான வளர்ச்சியால் உருவாயிற்று. 1979ஆம் ஆண்டில் மூலதன அமைப்பு 25 சதவீதத்தால் உயர்வடைந்தது. இது அரச, தனியார்துறைகளில் மேற்கொள்ளப்பட்ட உயர்ந்தளவு முதலீட்டைப் புலப்படுத்துகிறது. நுகர்வும் 12 சதவீததால் உயர்ந்தது. உள்நாட்டுச் சேமிப்புக்கள் சிறிதளவு கீழ் நோக்கிய போக்கைக் காட்டியபோதிலும் உயர்ந்தளவில் உருவாகிய பட்டியல்களை நோக்குமிடத்து முன்னைய ஆண்டின் மட்டத்திலேயே அமைந்திருக்கும்.

சென்றவாண்டுடன் ஒப்பிடுமிடத்து 1979ஆம் ஆண்டில் பொருளாதார விரிவாக்க வீதத்தில் காணப்பட்ட மிதமான தன்மைக்கு, சென்றவாண்டுக்கு முன்னைய ஆண்டில் வேளாண்மைத்துறையில் காணப்பட்ட 5 சதவீத வளர்ச்சிக்கு மாறாக 1979இல் இத்துறை ஒருவித மந்த நிலையுடன் 2 சதவீதத்தால் மட்டும் வளர்ச்சியடைந்திருந்தமையே பெரிதும் காரணமாகும். மேலும் 1978இல் கூடிய வளர்ச்சித்துறைகளாக விளங்கிய கட்டடவாக்கம், சுரங்கமறுத்தல்,வலு ஆகியவற்றின் வளர்ச்சி 1979இன் இறுதியில் இயலளவிலும், மூலவளங்களிலும் ஏற்பட்ட தடைகளின் காரணமாக ஓரளவிற்கு மெதுவாகக் காணப்பட்டது. மேலும், 1978இல் ஏற்பட்ட பொருளாதார எழுச்சி 1977இல் பொருளாதாரத்தில் காணப்பட்ட குறைந்த மட்ட செயற்பாடும் குறைந்தளவில் இயலளவுப் பயன்பாடும் கொண்டதொரு சூழ்நிலையின் பின்னணியில் ஏற்பட்டமையால் தொடர்ந்து வந்த பின்னைய ஆண்டில் இத்தகையதொரு உயர்ந்த வளர்ச்சி வீதத்தை எதிர்பார்க்க முடியாது.

1979இல் இலங்கையின் வர்த்தகமாற்று விகிதம் 28 சதவீதத்தால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட 52சதவீதம் கொண்ட அதிகரிப்பானது ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட 9 சதவீதம்கொண்ட அதிகரிப்பினை இல்லாதொழித்தது. மறுபுறத்தில் 1979ஆம் ஆண்டில் இறக்குமதி அளவுகள் 23 சதவீதத்தால் உயர்வடைந்தவேளையில் ஏற்றுமதி அளவுகள் 1 சதவீதத்தால சிறிதளவு உயர்வடைந்தது. இதன் விளைவாக வர்த்தகக்குறை 1978இன் குறையை நாலுமடங்காக்கியது. உண்மையில் இது ஒருபுறம் நாட்டின் இடைக்கால பொருளாதார நோக்கத்தின் பொருட்டு முன்னர் திட்டமிடப்பட்டவாறு வெளிநாட்டு மூலவளங்களை கூடுதலாகப் பெற்றமையால் ஏற்பட்ட


தேயாகும். இதன் விளைவாக பணிகள், மாற்றல்கள் ஆகியவற்றின் உள்வருகையில் கணிசமானதொரு திருந்தியதன்மை நிலவியபோதிலும், சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்கு முன்னைய ஆண்டைக்காட்டிலும் இரண்டு மடங்கால் அதிகரித்து என்றுமில்லாததொரு குறையை ஏற்படுத்தியது. இருப்பினும், பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து பெருமளவில் கிடைத்தமுதலீட்டின் உள்வருகைகள், மூலவளங்கள் என்பன மொத்தத்தில் மிதமானதொரு மிகையை ஏற்படுத்தியதெனினும் இவைகள் உண்மையில் வெளிநாட்டு மூலவளங்களைக் கட்டியெழுப்புவதற்கே சென்றடைந்தன. 1979இன் இறுதியில் இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1980இன் திட்டமிடப்பட்ட இறக்குமதிகளில் ஏறக்குறைய மூன்றரைமாத இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்கு போதியதாக இருந்தன.

1979இன் இறைத்தொழிற்பாடுகள் பெரிதும்வருவாயில் ஏற்பட்ட 9 சதவீதம் கொண்ட வளர்ச்சி, நடைமுறைச்செலவில் ஏற்பட்ட 3சதவீத அதிகரிப்பு ஆகியவற்றால் ஏற்பட்ட மிதமான நடைமுறைக்கணக்குமிகையால் அமைவதாயிற்று. ஆனால் மூலதன செலவீட்டில் ஏற்பட்ட 35 சதவீதம் கொண்ட அதிகரிப்பு வரவு செலவுத்திட்டக்குறையை 1978ஆம் ஆண்டைக்காட்டிலும் 23 சதவீதத்தால் அதிகரிக்கச்செய்தது. வெளிநாட்டு மூலவளங்களைக் கடந்த ஆண்டின் மட்டங்களில் பெற்ற உள்நாட்டு சேமிப்புக்களைப் பெருமளவில் திரட்டியபோதிலும் சிர்குலைக்கும்வகையில் தோன்றிய பெரும்பண இடைவெளி விரிவாக்கம் நிறைந்த வங்கிக்கடன்பாடுகளால் ஈடுசெய்யப்பட்டது. இதனுடன், வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட கணிசமான வளர்ச்சியும், முன்னைய ஆண்டில் நிலவிய நன்கமைந்த மிதமான போக்கினை மாற்றியமைக்கும் வகையில், இவ்வாண்டுக்காலப்பகுதியில் பணநிரம்பலில் 29 சதவீதம் கொண்டதொரு வளர்ச்சியினை ஏற்படுத்தியது.

இத்துறைகளிலிருந்து ஏற்பட்ட தாக்கங்களினால் அரசால் கொண்டு நடாத்துப்பட்டு வந்த விலைகளில் மேற்கொள்ளப்பட்ட மேல் நோக்கிய மீளமைவுகளைத் தொடர்ந்து பணவீக்க அமுக்கங்கள் குறிப்பாக இவ்வாண்டின் இறுதிப்பகுதியில் உச்ச நிலையை அடைந்தது. சென்ற ஆண்டைக்காட்டிலும் இவ்வாண்டில் பணக்கூலிகள் விரைவாக 20 சதவீத வீக்க அளவில் உயர்வடைந்த பொழுது வேளாண்மைத்துறைக்குப் புறம்பான உண்மையான கூலிகள் வீழ்ச்சியடைந்திருக்கலாம். எனினும் தொழிலற்ற நிலைமைகள் ஊக்குவிக்கத்தக்க அறிகுறிகளுடன் 1978இன் இறுதியில் இருந்த தொழிற்படையின் அளவிலிருந்து (1973இன் 24 சதவீதத்திலிருந்து) ஏறக்குறைய 15 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தொழிலின்மையில் அபிவிருத்தி பெரும்பாலும் நகர, பெருந்தோட்டத்துறையில் ஏற்பட்டது. இத்துறையில் தொழிலின்மை 1973ஆம் ஆண்டிற்கும் 1978ஆம் ஆண்டுக்கும் இடையில் அரைப்பங்காகக்குறைந்து கிராமப்பகுதியின் தொழிலின்மை 37 சதவீதத்தால் வீழ்ச்சியடைய நகர்ப்பகுதிகளில் தொழிலின்மை 34 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தொழிலின்மையின் பெரும்பகுதி கிராமப்பகுதிகளில்தான் காணப்பட்டது. இளைஞரிடையே அதாவது பதினைந்து முதல் இருபத்தைந்து ஆண்டு நிரம்பியவர்களிடையே நிலவிய தொழிலின்மையில் கணிசமான வீழ்ச்சி காணப்பட்டது.

முன்னைய ஆண்டின் 16சதவீத வளர்ச்சியுடன் ஒப்புநோக்குமிடத்து 1979ஆம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்தி நடைமுறைக்காரணிச் செலவு விலைகளில் 22 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளது. விலைமாற்றங்கட்காக சுருக்கு

## மொத்தத் தேசிய உற்பத்தி





பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

மூலம் : இலங்கை மத்திய வங்கி

# கைத்தொழில் மூலத்தின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி

***நிலையான (1970) காரணிச் செலவு விலைகளில்***




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

மிடத்து 1979இல் தேசிய உற்பத்தியின் உண்மையின் வளர்ச்சி 6.2 சதவீத மாகும். குடித்தொகை வளர்ச்சியின் பொருட்டு 2.0 சதவீதத்தைக் கணக்கி லெடுப்பின், தலைக்குரிய உண்மையான உற்பத்தி முன்னைய ஆண்டின் 6.3 சத வீதத்துடன் ஒப்புநோக்குமிடத்து இவ்வாண்டில் 4.2 சதவீதத்தால் வளர்ச்சி யடைந்துள்ளது. நடைமுறைச்சந்தை விலைகளில் தலைக்குரிய தேசிய உற்பத்தி 1978இன் ரூ. 2,827 (ஐ. அ. டொலர் 181) இலிருந்து 20 சதவீதத்தால் அதி கரித்து 1979இல் ரூ. 3,378 ஆக (ஐ. அ. டொலர் 217) ஆக அமைந்தது. விபரங்கள் கீழுள்ள அட்டவணையிலும், நீண்டகாலத்தொடர்ச்சிகள் புள்ளி விபரப்பின்னிணைப்பிலும் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 1.1

### தேசிய வருவாய் புள்ளிவிபரங்கள் 1977 - 1979 (அ)

| விடயம் | தொகை ரூபா பத்து இலட்சத்தில் | | | வளர்ச்சி வீதங்கள் (%) | | |
|---|---|---|---|---|---|---|
| | 1977 | 1978 | 1979 | 1977 | 1978 | 1979 |
| 1. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 34,933 | 40,335 | 49.125 | 22.6 | 15.5 | 21.8 |
| 2. நிலையான (1970) காரணிச் செலவு விலைகள் ... | 16,078 | 17,401 | 18,501 | 4.2 | 8.2 | 6.3 |
| 3. நடைமுறைக் காரணிச் செலவு விலை களில் மொத்தத் தேசிய உற்பத்தி ... | 34,681 | 40,098 | 48,885 | 22.9 | 15.6 | 21.9 |
| 4. நிலையான (1970) காரணிச்செலவு உற்பத்தி ... | 15,999 | 17,311 | 18,389 | 4.2 | 8.2 | 6.2 |
| 4. நடுவாண்டுக் குடித்தொகை (பத்து இலட்சம்) ... | 13.9 | 14.2 | 14.5 | 1.6 | 1.8 | 2.0 |
| 5. மொத்தத் தேசிய உற்பத்தி தலைக்கு (ரூ.) | | | | | | |
| (அ) நடைமுறை விலைகளில் ... | 2,489 | 2,827 | 3,378 | 21.0 | 13.6 | 19.5 |
| (ஆ) நிலையான விலைகளில் ... | 1,148 | 1,220 | 1,271 | 2.6 | 6.3 | 4.2 |

(அ) தற்காலிகம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1978 ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சியின் 18 சதவீதத்திற்கு பங்களித்த வேளாண்மைத்துறை 1979இன் பொருளாதார வளர்ச்சிக்கு 8 சதவீத பங்களிப்பையே வழங்கியுள்ளது. வர்த்தகத்துறை 1978இன் வளர்ச்சியில் 20 சதவீதத்திற்கு பங்களித்திருந்த வேளையில் 1979ஆம் ஆண்டில் அதன் பங்கு இறக்குமதி செய்யப்பட்டதும், உள்நாட்டு பொருட்களினதும் வர்த்தகத்தில் ஏற்பட்ட விரிவின் காரணமாக 26 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. கட்டட வாக்கம், சுரங்கமறுத்தல் ஆகிய துறைகளின் பங்கு 21 சதவீதத்திலிருந்து 1979இல் 18 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. தயாரிப்புத்துறையின் பங்கு மெதுவான வளர்ச்சிவீதத்தின் காரணமாக 14 சதவீதத்திலிருந்து 11 சதவீத மாக 1979இல் வீழ்ச்சியடைந்தது. இதே வேளையில் நிதி, நிர்வாகம், ஏனைய பணிகள் 15 சதவீதத்திலிருந்து 1979 இல் 23 சதவீதமாக அதிகரித்து வளர்ச்

சிக்கு கூடிய பங்கை அளித்தன. இவ்வாறு 1979இல் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் கூடிய அளவில் பங்களித்த துறைகளாக பொருளாதாரத்தின் தாராளமாக்கலுடன் நேரடியாக தொடர்புடையனவாக வர்த்தகம், நிதி, பணிகள் ஆகிய துறைகள் காணப்படுகின்றன.

1979ஆம் ஆண்டில் நிலவிய ஒவ்வாத காலநிலையின் காரணமாக வேளாண்மையின் வளர்ச்சி சிறிது நலிவுற்றது. இருப்பினும் வேளாண்மையில் கிடைக்கப்பெறும் உயர்மட்ட வெளியீட்டை மேலும் அதிகரிப்பதற்கு இத்துறைக்கு ஏற்புடையதாக கொள்கைகளை மேலும் சீர்ப்படுத்துதல் வேண்டும். இவ்வாறு சீரற்றமுறையில் செயற்பட்ட தயாரிப்புத்துறையைப் பொறுத்தமட்டில் அதற்கு தேவைப்படும் மூதற் பொருட்கள் பற்றியும் நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதுபற்றியும் அடிப்படையில் மீள ஆயப்படல் வேண்டும். மேற்கொள்ளப்பட்டுள்ள மூலதனத்தில் மூன்றில் இரண்டு பங்கு அரச துறையில் செய்யப்பட்டுள்ளது. இதுவும் நீண்ட காலத்தின் பின்னர் பயனைவிளைவிக்கும் ஆற்றுவழிப்படுத்தல் திட்டங்கள், நீண்ட நாள் உயிர்வாழும் பயிர்கள் போன்ற உள்ளீட்டு அபிவிருத்தித் திட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே நீண்டகாலத்திற்கும் விரைவாகப் பயன்தரும் செயல் திட்டம் ஆகிய இரண்டுக்கும் இடையில் அரசின் சொத்துக்களை சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்வதன் மூலமாகவும், சரியான கொள்கை மாற்றங்களை மேற் கொள்வதன் வாயிலாக தனியார் துறையை குறுங்காலத்தில் பயன்தரும் நிலையில் திட்டங்களில் முதலிட ஊக்குவிப்பதன் வாயிலாகவும் மட்டுமே வேளாண்மை, கைத்தொழில் துறைகளில் உயர்வீத வளர்ச்சியினை எய்தலாம். இது தொடர்பாக, அரசு 1979இல் தேயிலை தெங்கு தொடர்பாக ஏற்றுமதி வரி, உள்நாட்டு விலையில் அரிசி, மா, சீனி, தெங்கு மீதான உதவுதொகை கொள்கைகள் ஆகியன ஒட்டி ஊக்கம் தரும் கொள்கைகளை மேற்கொண்டது. இவ்வழிமுறைகள் நுகர்வோன் செலவில் உற்பத்தியாளர்களினது இலாப எல்லைகளை சீர்திருத்துவதாக இருந்தன. இம் முடிவுகள் நாட்டின் உற்பத்தியாளர்களின் செலவிலிருந்து நுகர்வோரைக் காப்பது என்ற நீண்டகால கொள்கைகட்கு மாறாக இருந்தன. அரசின் வருவாயில் கணிசமான பங்கை செலவிட்டு நீண்டகாலமாக நுகர்வோரை பாதுகாத்துவந்த சூழ்நிலையில் மேற்கூறிய வழிமுறைகடினமாக அமைந்தது இவ்வழிமுறைகளைத் தொடர்ந்து இதுவரை இவற்றிற்கு ஈந்துவந்த அரசின் வருவாயும் முடிவுற்றது. எவ்வாறாயினும் எதிர்வரும் ஆண்டில் போதிய கொள்கை வழிமுறைகளின் வாயிலாக இத்துறைகட்கு உதவி செய்வது பற்றி கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். கடந்த ஆண்டின் ஆண்டறிக்கையில் உற்பத்தியாளனின் இலாப எல்லைகளை உறுதிப்படுத்தும் வேளையில் நுகர்வோருக்கு ஏற்ற விலைகளை உறுதிப்படுத்துவதில் நீண்டகாலமாக இருந்துவரும் முரண்பாடு எடுத்துக்காட்டப்படுவதுடன், நாடு அது நாடிநிற்கும் பொருளாதார வளர்ச்சி வீதத்தினை எய்துவதற்கு நுகர்வோர், உற்பத்தியாளர் ஆகியோரிடையே நிலவும் முரண்பாடுகளை உற்பத்தியாளருக்குச் சார்பாக அகற்றுவதுபற்றி வலியுறுத்தப்பட்டன. வளர்ந்துவரும் கட்டற்ற பொருளாதாரம் ஒன்றில் தனியார் துறையானது பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்கினை ஆற்ற எதிர்பார்க்கப்படுகிறது. எனவே உற்பத்தியாளனின் செலவில் நுகர்வோருக்கு வழங்கப்பட்டுள்ள உதவு தொகையினை அகற்றாது விட்டால் வேளாண்மை, கைத்தொழில் ஆகியவற்றின் முதன்மையான பிரிவுகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் சார்பான செயற்பாடுகளை அடைய இயலாது.

சென்ற ஆண்டைப்போன்று 1979 இலும் வேளாண்மைத் துறையின் செயற்பாடு சீரற்றதாக இருந்தது. தேயிலை, நெல் ஆகியவற்றின் வெளியீடு எல்லையளவில் உயர்ந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சிறுபோககாலத்தில் வரட்சி

UNIVERSITY OF MORATUWA LIBRARY

யால் ஏற்பட்ட நெல்லுற்பத்தியின் வீழ்ச்சியை பெரும்போக காலத்தில் கிடைத்த கூடியளவான உற்பத்தி எதிரீடு செய்ததுடன் இதுசென்றவாண்டு உற்பத்தியை விஞ்சியுள்ளதுபோல் தோன்றுகிறது. தேயிலையைப் பொறுத்த மட்டில் மிகவும் சார்பற்ற விலைகள் நிலவியமை, வளமாக்கி குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தபோதிலும் உற்பத்தி 4 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளது. இதற்கு முன்னைய ஆண்டின்போது நிர்வாகத்தில் மேற்கொள்ளப் பட்ட விரிவான சீர்திருத்தங்களின் பின்னர் இக் கைத்தொழிலில் நிலவிய உறுதியான நிலைமைகளே காரணமாகும். விலைகளில் திருந்திய நிலைமைகள் இருந்த போதிலும் இறப்பர் உற்பத்தி 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டின் 21 சதவீத வளர்ச்சியுடன் ஒப்புநோக்குமிடத்து இறப்பர் உற்பத்தி 8 சதவீதத்தால் உயர்வானதாக இருந்தது. இருப்பினும் எழுபதாம் ஆண்டுகளில் அடையப்பட்ட சராசரி மட்டங்களுக்கு மிகவும் குறைவாகவே இவ்வுற்பத்தி இருந்தது. சில சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி நன்கமைந்திருந்த வேளைகளில் சில உற்பத்திகளில் வீழ்ச்சி காணப்பட்டது. பெரும்பாலும் உதவு தொகை விலையில் தாராளமாக கோதுமைமா வழங்கப்பட்டமை, உள்நாட்டு விலைகளை உறுதியாக பேணுவதன் பொருட்டும், தாங்கிருப்பிற்காகவும் வெங்காயம், மிளகாய் போன்ற ஏனையவை இறக்குமதி செய்யப்பட்டமையின் காரணமாக சிறு உணவுப்பயிர்களின் உற்பத்தி தொடர்ந்தும் வீழ்ச்சித் தன்மையைக் காட்டின. கரும்பு உற்பத்தி மிகவும் வீழ்ச்சியடைந்தது போன்று பால் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்தது. மீன், முட்டை ஆகியவற்றின் உற்பத்தி சீரடைந்துள்ளது. பொதுவாகக் கூறுமிடத்து வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புக்களைக் கட்டுப்படுத்துவதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட பலதரப்பட்ட கொள்கைகளின் காரணமாக உற்பத்திக்கு போதியளவு ஊக்குவிப்புக்கள் இன்மை மொத்தத்தில் வேளாண்மைத்துறையில் இச்சீரற்ற செயற்பாட்டிற்கு காரணமாகும்.

மறுபுறம் வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட அபிருத்திகள் கடந்தகால போக்குகளை முற்றிலும் மாற்றுவதாக இருந்தன. காலம்கடந்த நிலையில் 1979ஆம் ஆண்டில் கமநலப்பணிகள் சட்டத்திற்குக் கொணரப்பட்ட திருத்தம் நிலச் சொந்தக்காரர் தமது உரிமைகளை வலுப்படுத்திக் கொள்ளவும் வாடகையாளர் கமநலஅமைப்பில் ஒரு வலிமைமிக்க அமைப்பினை ஏற்படுத்திக் கொள்ளவும் செய்தது. அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் 1973இல் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் வேளாண்மை கொடுகடன் மிகவும் குறைந்த மட்டங்களுக்கு இவ்வாண்டில் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு 1977/78 பெரும்போகக் காலத்தில் போதியளவிற்கு ஆய்ந்து கொடுகடனை வழங்கியமையின் காரணமாக, அக்கடன்களில் பெரும்பாலானவை மீளச் செலுத்தப்படாமையின் காரணமாக ஏற்பட்ட கட்டுப்பாடுகளின் விளைவே காரணமாகும். 1978இல் ஏற்பட்ட சூறாவளியின் காரணமாக பெறப்பட்ட எண்ணற்ற இழப்பெதிர்க்காப்பு விண்ணப்பங்கட்குக் காப்புப்பணம் செலுத்தியதன் காரணமாக வேளாண்மைக் கொடுகடன் நிதியத்தின் நிதிவளம் கரைவுற்றது. இதன் பின்னர் வேளாண்மைக் காப்புறுதி வசதிகள் கமக்காரருக்குக் கிடைக்கவில்லை.

மறுபுறம் அரசு. வளமாக்கி விலைகளை உயர்த்துவதினின்றும் தவிர்த்து இதற்குரிய உதவுதொகையினை கணிசமானளவு உயர்த்தி கமக்காரர்களைக் காத்தது. மேலும், மீள் நடுகைக்கான உதவுதொகைகள் முற்போக்கற்ற முறையில் உயர்த்தப்பட்டன. ஏனெனில் இவ்வுதவுதொகைகள் மீள்நடுகை காலத்திற்கும் பயிர்கள் வளர்ந்து பயன்தரும் காலத்திற்கும் இடையில் இழக்கப்பட்ட

காலப்பகுதியைக் கணக்கிலெடுக்கவில்லை. அத்துடன், ஏற்றுமதி வரிவிதிப்பு மேலும் குறைக்கப்பட்டதுடன் சிலவற்றில் முற்றாக நீக்கப்பட்டது.

1979ஆம் ஆண்டில் தயாரிப்புத்துறையின் செயற்பாடு முன்னைய ஆண்டில் அடையப்பட்ட வளர்ச்சி வீதத்திலும் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது. 1979ஆம் ஆண்டில் இருபெரும் துணைத் துறைகளான உணவு, குடிவகைகளும், புகையிலை, இரசாயனம், பெற்றோல் ஆகியவற்றின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க வகையில் வீழ்ச்சியடைந்தன. முன் கூறப்பட்ட துணைத் துறையில் உள்ளீடுகளின் தட்டுப்பாடும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் தாராளமாகக் கிடைத்தமையும் மிகவும் பாதிப்பை ஏற்படுத்தியது. பின்பு கூறப்பட்ட துணைத் துறையில் தூய்மைப்படுத்தும் ஆலையின் வெளியீட்டில் ஏற்பட்ட 6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியே காரணமாகும். அரசின் புடவைத்துறைக்குரிய ஆலைகளின் வெளியீட்டில் 4 சதவீத வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டது. இதனைத் தனியார் ஆலைகளிலும் ஆடைகள் உற்பத்தி செய்யும் தொழிற் கூடங்களிலும் ஏற்பட்ட வளர்ச்சி எதிரீடு செய்தது. மேலும் கட்டடவாக்கம் தொடர்பான உலோக மற்ற கனிப்பொருட்களின் உற்பத்திகளில் வளர்ச்சி காணப்பட்டது.

அலுவல் சார்பான வாழ்க்கைச் செலவு சுட்டெண்ணாகிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் சென்றவாண்டின் 12 சதவீத வளர்ச்சிக்கு மாறாக 1979இல் 11 சதவீதம் கொண்டதொரு வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. இவ்வாண்டில் ஏற்பட்ட மூன்றில் இரண்டு பங்கு அதிகரிப்பிற்கு பொருளாதாரத்தில் நுகர்வோருக்கு வழங்கப்பட்டிருந்த உதவு தொகைகளை குறைக்கும் நோக்கமாக அரசால் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களே காரணமாகும். சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பில் 55 சத வீதத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களே ஒருபுறம் காரணமாகும். இச்சுட்டெண் 1979இன் இறுதிப்பகுதியில் விலைகளில் ஏற்பட்ட கூடுதலான தாக்கத்தைக் காட்டும் வகையில் 1979 திசெம்பரில் 15 சதவீதம் கொண்டதொரு ஆண்டு உயர்ச்சியைக் காட்டியது. 1979இல் இலங்கை மத்திய வங்கியின் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் 9 சதவீதம் கொண்ட மிகக் குறைந்த சராசரியினைக் காட்டி திசெம்பர் இறுதியில் 16 சதவீதமாக ஆண்டுஅடிப்படையில் உயர்வடைந்தது.

பொதுவாகக் கிடைக்கும் நல்ல தரவுகளின்படி பணவீக்க அமுக்கத்தின் தாக்கங்கள்1979இல் குறிப்பாக ஆண்டின் நடுப்பகுதியில் கூடுதலாக இருந்துள்ளன. ஆண்டுச் சராசரி அடிப்படையில் 1979இல் ஏற்பட்ட விலையதிகரிப்புக்கள் சென்றவாண்டில் மதிப்பிடப்பட்ட 15 சதவீதத்திற்குமாறாக 20 சதவீதம் அளவில் அமைந்திருக்கலாம். இப்போக்கில் மீட்சிக்குரிய ஒரு பண்பாக விளங்கியது யாதெனில் உருவாகிய இவ்வுயர்ச்சியின் ஒரு பகுதி செயற்கையான முறையில் கீழ்நோக்கி விலைகளை வைத்திருக்க ஏதுவாகிய சில உதவுதொகைகள் நீக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்டது. இது ஒரு வகையில் வரவேற்கத்தக்கதாகும். ஏனெனில் நீண்டகாலத்தில் இது உள்நாட்டு உற்பத்தியையும் வருமானங்களையும் அதிகரிக்க உதவியாக இருக்கும். வறிய மக்களின் வாழ்க்கைச் செலவின்மீது இவ்வதிகரிப்பின் விளைவால் உடனடியாக ஏற்பட்ட தாக்கம் உணவு முத்திரைகளை வழங்கியதன் வாயிலாக ஓரளவிற்கு குறைக்கப்பட்டது. உலகம் அனைத்திலும் நிலவிய பணவீக்கத்தை எடுத்துக்காட்டும் வகையிலும், எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினை தெளிவாக்கும் வகையிலும் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் மிகவும் கவனத்திற்குரியதாக இருந்தன. ஆண்டின் நடுப்பகுதியில் பணவீக்க நிலைமைகள்

பொருளாதாரத்தின்மிகப் பெருஞ் சிக்கலாகவும், பணவீக்கநிலைமைகள் குறைவ தற்கான எதுவித அறிகுறிகளையும் அனைத்துலக விலை நிலைமை காட்டாத இச் சூழ் நிலையிலும் அரசின் கட்டட ஆக்கத் தொழிற்பாடுகள் முழு அளவில் ஏற்பட்டு வருகின்றன.

அரசின் முழு அளவிலான பொருளாதார நோக்கங்களில் விலைச் சீர்திருத் தங்கள் மீதான கட்டுப்பாடுகளுக்கு ஒரு சிறப்பு மாற்றமாக கட்டற்ற போட்டி வலியுறுத்தப்பட்டபோதிலும் உயர்ந்து செல்லும் பணவீக்க நிலைமைகளுடன் 1979இல் விலைக்கட்டுப்பாடுகளும், சட்டங்களும் தோன்றின. தட்டுப்பாட்டின் காரணமாக நிரம்பலை விஞ்சிய நிலையில் கேள்வி ஏற்படும் பொழுது விலைகள் உயர்வடைவது இயற்கையே. இலங்கையின் கடந்தகால பட்டுணர்வை நோக்கு மிடத்து இத்தகையதொரு நிலைமையில் மேற் கொள்ளப்படும் விலைக்கட்டுப் பாடுகள் உண்மையில் விலைகளில் செயற்கையான குறைப்பையே ஏற்படுத்தி யுள்ளன. தட்டுப்பாடான பொருட்கள் பங்கீடு செய்யப்பட வேண்டியிருக்கும். இதுவும் ''கறுப்புச்சந்தை'' தோற்றுவதைத் தவிர்க்காது. இச்சந்தை கட்டற்ற சந்தை விலையையும், அத்துடன் சட்டத்திலிருந்து தப்பிக்கொண்டமைக்குரிய ஒரு தொகையையும் உள்ளடக்குகிறது. நுகர்வோரில் பெரும்பாலோர் இவ் வுயர் விலைகளை செலுத்த வேண்டியிருக்கும். இவ்வகையானதொரு நிலைமை, செலவுகளின் அதிகரிப்பின் காரணமாக இயற்கையாக ஏற்படும் அதிகரிப்புக்களை தவிர்ப்பதற்காக விலைகளைக் கட்டுப்படுத்தும் பொழுதும் ஏற்படலாம்.

இவ்வகையான கட்டுப்பாடுகளின் காரணமாக இழப்புக்கள் ஏற்படு மாயின் உற்பத்தியாளர்கள், உற்பத்தி செய்வதினின்றும் தவிர்த்துக் கொள் வார்கள். இந்நிலையில் சந்தையில் இப்பொருட்களின் கிடைப்பனவு குறைந்து விடும். இது, விலைகளை மேல்நோக்கி உயர்த்தி நிலைமையை மேலும் மோச மாக்கும். இந்நிலையில் விலைக்கட்டுப்பாட்டில் திறன்பொருந்திய பங்கீட்டுமுறை வெற்றியளிக்கக்கூடியதாக இருக்காது. மேலும் நன்கு கட்டுப்பாட்டுடன் சீர்திருத்தம்பெற்ற சமுதாயங்களின் பட்டுணர்வு பங்கீட்டுத் திட்டத்தை வெற்றிகரமாக நீண்டநாட்களுக்கு வைத்திருக்க முடியாதென்பதைக் காட்டு கிறது. எனவே, குறைந்த விலைகளில் சலுகைகளுடன் நுகர்வோருக்குச் செய் யப்பட்ட பொது எடுகோளுடனு விலைக்கட்டுப்பாடுகள் நீண்டகாலத்திற்கு ஏற்புடையதாக இருக்காது எனவே குறுங்கால நன்மைகளைப் பயக்கும் விலைக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளாமலும் உற்பத்திக்கு ஊக்கம் பயக்காத ஊக்கு விப்புக்களை மேற்கொள்ளாமலும் நிரம்பலினை கூட்டக்கூடிய வழிமுறைகளை மேற்கொண்டு நல்லமுறையில் சந்தைகளில் நுழைவது பயன்தரக்கூடியதாக அமையும். செயற்கையான விலைக்கட்டுப்பாடுகள் நீண்டகாலத்தில் நுகர் வோனுக்கு நன்மை பயக்காதென்பதை நீண்டகால பட்டுணர்வு எடுத்துக் காட்டுகிறது.

1979இல் அரசு, அரசு சார்பான ஊழியர்களுக்கு பல கூலி உயர்வுகளை வழங்கியது. தனியார்துறையில் கூலிகள் உயர்மட்டங்களில் பொருளா தாரத்தில் ஏற்பட்ட செயற்பாடுகளையும், குறுங்காலத்தில் தொழில் நிரம்பலில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளையும் எடுத்துக்காட்டும் வகையில் மிகவும் விரைவாக கூடிச்சென்றன. 1978இலும், பின்பும் தொழிலின்மை கணிசமானளவு குறைந்தது. முன்பு கூறப்பட்டதுபோல் 1973இல் 24 சதவீதமாக இருந்த தொழிற்படை 1978இல் 15 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. தோட்டத் துறையில் தொழிலின்மை பெருமளவில் வீழ்ச்சியடைந்தது. எனினும் குடும்ப

வருமானங்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக பொதுவாக தொழிலின்மை மிகவும் வலுவானதாக இருக்கவில்லை. தொழிலின்மை (''கல்விப் பொதுச்சான்றிதழில் தேர்ச்சிகளுடன்'')பெரும்பாலும்தொடக்கக்கல்வி கற்றோரிடம் நிலவியவேளையில் குறைந்த கல்விகற்றோரிடையே நிலவிய தொழிலின்மை கணிசமாக வீழ்ச்சியடைந்தது.மேலும் குறைந்தஅகவை கொண்டவர்களிடையே (14-25 ஆண்டுகள்) நிலவிய தொழிலின்மை வீழ்ச்சியடைந்துள்ளது. 14-18 ஆண்டுகள் நிரம்பிய பிரிவினரிடையே தொழிலின்மை 66 சதவீதத்திலிருந்து 24 சதவீதமாக வீழ்ச்சியடைய 19-25 ஆண்டுகள் நிரம்பியவர்களிடையே நிலவிய தொழிலின்மை 48 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்குக் குறைவடைந்தது.

மத்தியவங்கியின் 1978ஆம் ஆண்டின் நுகர்வோர் நிதி சமூகப்பொருளாதார அளவீட்டின் முதல் சுற்றின் தொடக்கத்தரவு இலங்கையில் வருமானப் பங்கிடல் 1973-1978 ஆண்டுக்கிடைப்பட்ட காலப்பகுதியில் மிகவும் மோசமடைந்திருந்தமையைக் காட்டுகிறது. 1953, 1963, 1973, 1978 ஆகிய ஆண்டுகட்கான வருவாய்ப் பங்கீட்டின் ஒப்பீட்டு நிலை உருபுகள் கீழ்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 1.2

**வருவாய்ப் பங்கீடு 1953 – 1978**

| விடயம் | 1953 | 1963 | 1973 | 1978 |
|---|---|---|---|---|
| 1. சராசரி வருவாய் (மாதாந்தம்) ரூபா ... | 108 | 134 | 228 | 574 |
| 2. மத்தியவருவாய் (மாதாந்தம்) ரூபா ... | 68 | 83 | 180 | 352 |
| 3. பெறப்பட்ட மொத்த வருவாயின் சதவீதம் | | | | |
| (அ) குறைந்த பத்து சதவீதம் ... | 1.5 | 1.2 | 1.8 | 1.5 |
| (ஆ) குறைந்த நாற்பது சதவீதம் ... | 13.0 | 12.0 | 15.1 | 12.3 |
| (இ) கூடிய பத்து சதவீதம் ... | 42.5 | 39.2 | 30.0 | 39.0 |
| 4. ஜினிவிகிதம் ... | 0.50 | 0.49 | 0.41 | 0.49 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மொத்தத்தில் மேலுள்ள அட்டவணையிலுள்ள தரவினை மிகக் கவனமான முறையில் ஒப்பிடல்வேண்டும். ஏனெனில் சுட்டப்பட்டுள்ள காலப்பிரிவிலும் உள்ளடக்கத்திலும் வேறுபாடுகள் நிலவுவதால் அவை கூடியளவிற்கு ஒப்பிடத் தக்கன அல்ல. எனினும் இப்போக்கு வருமான மட்டங்களில் கணிசமான அபிவிருத்தியினை காட்டுகிறது. 1973 முதல் 1978 வரையுள்ள ஐந்தாண்டுக் காலப்பகுதியில் சராசரி வருவாய்உண்மையான நியதிகளில் 38 சதவீதத்தால் உயர்வடைந்தவேளையில் ஒப்புநோக்குமிடத்து 1963 தொடக்கம் 1973ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் ஏற்பட்ட வளர்ச்சி 12 சதவீதமாகும். ஆனால் 10 சதவீதத்திற்கும் குறைவாக வருவாயைப் பெற்றவர்களின் வருவாய்ப்பங்கு 1973இன் 1.8 சதவீதத்திலிருந்து 1978இல் 1.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. குறைந்த 40 சதவீத வருவாய் 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. மறுபுறம், உயர் 10 சதவீத வருவாயைப் பெறுபவர்களின் வருவாய் 30 சதவீதத்திலிருந்து 39 சதவீதமாக உயர்ந்தது. இது, 1973 தொடக்கம் 1978 வரையுள்ள ஐந்து ஆண்டுக்காலப்பகுதியில் கினி செறிவு

விகிதம் 0.41 சதவீதத்திலிருந்து 0.49 சதவிகிதமாக மாறியதிலிருந்து வருவாய்ப் பங்கிடு பெரும் சமனற்ற நிலையை நோக்கி மாறியமையைக் காட்டுகிறது. இவ்விகிதங்கள் வருவாய்சமமின்மையை எடுத்துக்காட்டும் ஒரு சுட்டெண்ணாக உள்ளன. பூச்சியத்திலிருந்து ஒன்று வரையுள்ள சமமின்மை எவ்வளவிற்கு விரிவுடையதாக உள்ளதோ அவ்வளவிற்கு வருமானத்தில் சமமின்மை காணப்படும்.

இப்போக்குகள் அண்மையில் ஏற்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களின் விளைவுகளை எடுத்துக்காட்டுவதாக உள்ளன. வருவாய் தொழில் வாய்ப்பில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக எல்லா வருவாய்த்துறைகளும் கணிசமான பயன்களைப்பெற்றன. இருப்பினும், ஒருபுறம் குறைந்த வகுப்பினருள் பெரும்பான்மையோர் முதன்முறையாக வருவாயைப் பெறுபவர்களாக உருவாகினலும், மறுபுறம் உயர்வருவாய்ப் பிரிவினரின் வருவாய் கணிசமானளவு உயர்வடைந்தது. இது, கினிச் சமமின்மையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு வருவாயில்நிலவிய சமமின்மையை விரிவுபடுத்தியது. எல்லா வருவாய்ப்பிரிவுகளும் நன்மையைப் பெற்றிருந்தபோதிலும் உயர்வருவாயைப் பெற்ற பிரிவே அதன்பங்கை 1978இல் உயர்த்திக்கொண்டுள்ளது, என்பது கவனிக்கத்தக்கதாகும். தொடக்கத்தில் வளர்ச்சியில் ஏற்பட்ட விரைவான விருத்திக்கு, குறைந்தளவான போட்டி காரணமாக வியாபாரத்தில் மூதற் கட்டத்தில் ஈடுபட்ட புதிய முதலீட்டாளர்களுக்கு இலாபங்கள் சேர்வது தவிர்க்க முடியாத ஒன்ருகும். பொருளாதாரத்தில் பெருமளவில் போட்டி ஏற்படுமிடத்து குறைந்த வருவாயுடைய பிரிவினருக்கு புதிய பொருளாதாரத்தின் செயற்பாட்டின் காரணமாக பெருமளவில் நன்மைகள் ஏற்படலாம். ஆனுல் இதற்கு சரியான இறைக்கொள்கைகளின் வாயிலாக ஊன்றுகோலளிக்க வேண்டும். இந்நிலையில் நுகர்வோருக்கான உதவு தொகைகளை கட்டுப்படுத்துதல், மறைமுகவரிகளுக்கு ஏற்பட்டுவரும் மூதன்மைத்தன்மை, நேரடியான, வரிச் சலுகைகளை தாராளமாக மிகக் கூடுதலாக வழங்குதல் போன்றன தோன்றி வருகின்ற வருவாய் சமமின்மையினை மிகவும் மோசமாக்கலாம்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுவரும் அபிவிருத்தி நிலையில் குறிப்பாக கடந்த காலத்தில் மிகவும் கூடுதலாக வழங்கப்பட்டுவந்த நலனளிப்புக்களைக் கருத்திற்கொண்டு சமமான வருவாய்ப்பங்கீட்டின் அடிப்படையில் பொருளாதாரத்தின் வளர்ச்சி வலியுறுத்தப்படல்வேண்டும். ஆனுல் மக்கட்கு பொருளாதாரத்தின் வளர்ச்சி தெளிவானதாக இருக்கவேண்டுமாயின், பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் நலன்கள் மக்களிடையே எவ்வாறு பங்கிடப்படுகின்றன என்பது சிக்கலானதொரு காரணியாக அமைகிறது. தொடக்கக் கட்டங்களில் உள்ளார்ந்த நோக்கத்துடன் மூலவளங்கள் நுகர்விலிருந்து முதலீட்டுக்கு ஆற்றுப்படுத்தப்படுமிடத்து வறிய மக்களின் உண்மையான வருவாய்கள் குறைவடைவது தவிர்க்க முடியாது. இவ்வேளையில் உயர்வருமான வகுப்பினருக்கு வழங்கப்பட்ட வரிச்சலுகைகள், முழு அளவிலான பெறுமதித் தேய்மானக் கழிவு ஆகியவற்றினை ஒட்டி மிகவும் கூடுதலாக சலுகைகள் வழங்காதிருப்பது நன்மை பயப்பதாகும். சென்ற ஆண்டின் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டதுபோன்று வளர்ச்சிக்கும் பங்கீட்டுக்கும் இடையில் ஒரு சமன்பாட்டினை ஏற்படுத்துவதற்கு வழி முறைகள் மேற் கொள்தல் வேண்டும்.

1979ஆம் ஆண்டில் வெளிநாட்டு வர்த்தகத்திலேற்பட்ட குறிப்பிடத்தக்கதொரு போக்குயாதெனில் இலங்கையின் வர்த்தக மாற்றுவிகிதம் 28 சதவீதத்

தால் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தமையாகும். ஏற்றுமதிகளின் பெறுமதி 13 சதவீதத்தால் அதிகரித்து ரூ 152,730 இலட்சமாக (சிஎஉ 7,590 இலட்சம்) அதிகரித்தவேளையில் இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகள் 45 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 225,600 இலட்சமாக (சிஎஉ 11,210 இலட்சம்) அதிகரித்தது. இதன் காரணமாக 1978ஆம் ஆண்டில் ரூ. 14,800 இலட்சமாக (சிஎஉ 1000 இலட்சம்) இருந்த வர்த்தகக்குறை 1979இல் ரூ 72,870 இலட்சமாக (சிஎஉ 3620 இலட்சமாக) விரிவடைந்தது. இத்தகையதொரு நிலை ஏற்படுவது ஏற்றுமதித்துறையானது ஈடுகொடுக்கக் கூடியதொரு வளர்ச்சி நிலைமையை அடையும்வரை வெளிநாட்டு மூலங்களை கூடுதலாகப் பெறுவதன் வாயிலாக நடுத்தர வழிமுறைகளால் தேங்கியிருக்கும் பொருளாதாரத்தினை மீட்டெழுச்சி பெறச் செய்வது தவிர்க்கமுடியாததாகும். ஏற்றுமதித்துறையின் குறிப்பாக மரபு வழி ஏற்றுமதிகளின் செயலாற்றம் நன்றாக அமைந்திருக்கவில்லை. இறக்குமதித்துறையை நோக்குமிடத்து நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் 35 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் இடைநிலை, முதலீட்டுப்பொருட்களின் பங்கு முறையே 41 சதவீதத்திற்கும், 24 சதவீதத்திற்கும் உயர்வடைந்தது. அரிசி, மா, சீனி மற்றும் புடவைகள் என்பவற்றின் இறக்குமதிகள் நுகர்வோர் பொருட்கள் இறக்குமதிகளில் பெரும் பங்கினைக் கொண்டிருந்தன. ஏனைய நுகர்வுப் பொருட்களின் பங்கு மொத்த இறக்குமதிகளில் 12 சதவீதமாக அமைந்தது.

வர்த்தக நிலுவையில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியை மிகவும் பெரிதாகப் புலப்படுத்தி நடைமுறைக்கணக்கில் இலங்கையின் சென்மதி நிலுவை என்றுமில்லாதவாறு ரூ. 35,560 இலட்சம் (சி. எ. உ. 1,770 இலட்சம்) கொண்டதொரு குறையை ஏற்படுத்தியது இந்நிலைமை பணிகள் (எ-டு துறைகள், காப்புறுதி) மாற்றல்கள் (எ-டு வெளிநாடுகளில் தங்கியிருக்கும் இலங்கையரின் அனுப்பல்கள்) போன்றவற்றிலிருந்து கிடைத்த வரவுகளை உள்ளடக்கிய கட்புலனாகாத தேறிய வருவாய்களில் கணிசமானதொரு விருத்தி காணப்பட்டபோதிலும் ஏற்பட்டது. இருப்பினும் சென்ற ஆண்டைப்போன்று கணிசமானளவு மூலதன உள்வருகையின் காரணமாக மொத்தத்தில் சென்மதி நிலுவையில் ரூ. 7,930 இலட்சம் கொண்ட (சி. எ. உ. 350 இலட்சம்) மிகை காணப்பட்டாலும் இது தொடர்ந்து வந்த நான்காவது ஆண்டாக இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்களை அதிகரிப்பதற்கே ஏதுவாயிற்று.

1979இல் அரசின் இறைத்தொழிற்பாடுகள் தொடக்கத்தில் எதிர்பார்க்கப்பட்டதற்குமாறாக ஆண்டுக்காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்ட துணைமதிப்பீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் காரணமாக வரவு செலவுத்திட்டக் குறையில் பெரும் விரிவினைக்காட்டியது. மீண்டெழும் செலவுகள் 8 சதவீதத்தால் உயர்வடைந்த வேளையில் மூலமதிப்பீடுகளிலிருந்து முற்பணக்கணக்குகளின் கொடுப்பனவுகள் ஆறு மடங்காக உயர்வடைந்தது. மூலதனச் செலவு 24 சதவீதத்தால் மிகவும் உயர்வானதாகக் காணப்பட்டது. இதே வேளையில் வருவாயானது 11 சதவீதம் கொண்ட மிதமான அதிகரிப்பினைக்காட்டியது. இவ்வாறு வரவு செலவுத்திட்டத்தினை விரிவற்ற நிதியிடலுடன் நிரப்புவதென்ற தொடக்க நோக்கினை 1979இல் அடைவதற்கு முடியாதுபோய்விட்டது. எனவே ஆண்டுக்காலப்பகுதியில் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களும், சூறாவளி அழிவின் காரணமாக மேலதிகமாக ஏற்பட்ட கடப்பாடுகளும் வரவு செலவுத்திட்டத்தினை ஈடுசெய்வதை மிகவும் சிக்கலாக்கியது. ஆனால் செலவுகளில் ஏற்படும் அதிகரிப்புக்களையும், முற்பணக்கணக்கின் செயற்பாடுகளையும்

UNIVERSITY OF MORATUWA LIBRARY

துணை ஒதுக்கீடுகளையும் நல்லமுறையில் கட்டுப்பாடுடன் பேணுவதன் வாயிலாக எதிர்காலத்தில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட போக்குகளை உறுதியாகத் தடுக்கலாம்.

இவ்வாண்டில் எதிர்பார்க்கப்பட்டதற்குமாறாக நாணய விரிவாக்கம் மிகவும் உயர்வானதாக இருந்தது. இதற்கு ஒருபுறம் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட திரண்ட மிகைகளினால் வெளிநாட்டுச் சொத்துக்களின் வளர்ச்சியில் ஏற்பட்ட அதிகரிப்பும் மறுபுறம் அரசின் இறைத்தொழிற்பாடுகளின் விரிவாக்க விளைவுகள் எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக உயர்வாக இருந்தமையும் காரணமாகும். இதனால் 1979ஆம் ஆண்டின் பெரும்பகுதிகளில் நிலவிய மிதமான நாணய விரிவின் காரணமாக நாணயக்கட்டுப்பாடுகளை மிகவும் கூடுதலாக மேற்கொள்வது ஏற்புடையதாகாது எனக்கருதப்படவில்லை. பொதுவட்டி வீத அமைப்பு மாறாது இருக்க, வர்த்தக வங்கிகள் மிகக் கூடுதலாக கடன்பாடுகளை பெறுவதுபோல தோன்றியதன் காரணமாக ஆண்டின் நடுப்பகுதியில் மத்திய வங்கி, வர்த்தகவங்கிகள் பெறுகின்ற கடன்பாடுகள் மீதான தண்ட வீதங்களை உயர்த்துவது நல்லதெனக் கருதியது. எனினும் ஆண்டின் இறுதியில் நாணய நிலைமை மிகவும் மோசமடைந்தது.

வெளிநாட்டுநாணய வங்கித்தொழில் (வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டத்தின் கீழ்) அறிமுகப்படுத்தப்பட்டமையும் 1979இல் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அபிவிருத்திகளாகும். இவ்வழிமுறைகள் கரைக்கப்பால் வங்கித் தொழிலை ஆற்றும் ஒரு மையமாக கொழும்பினை அபிவிருத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மொத்தத்தில் 1979இன் பொருளாதாரம், 1977இல் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்களால் ஏற்பட்ட விளைவுகட்கு ஈடுகொடுக்கக் கூடியதாக இருந்தது. 1978இல் திடீரெனத் தோற்றிய எழுச்சிக்குப்பின்னர் ஈடுகொடுக்கக்கூடிய வளர்ச்சிப்போக்கில் பொருளாதாரம் விளங்கியது போல் தெரிகிறது. ஆனால் வேளாண்மையின் முதன்மைத்துறைகளில் வலுவுடன் கூடிய வளர்ச்சிக்கான உந்துதல்கள் இதுவரையில் ஏற்படவில்லை. கைத்தொழிற் துறை இத்துறைகளை வளர்ப்பதற்கு மிகவும் விரைவில அதன் கொள்கைகளை ஏற்புடையதாக செய்யப்படவேண்டுமென வலியுறுத்துகிறது. பெரும் அளவில் அமைந்த வர்த்தகக்குறை, வெளிநாட்டு மூலவளங்களை கூடுதலாக நாட வேண்டியமையை மட்டும் புலப்படுத்தாது ஏற்றுமதி முயற்சியில் நிலவிய மந்த நிலைமையையும் எடுத்துக் காட்டியது. பெருமளவிலான மூலதன உள்வருகைகளால் ஈடுசெய்யப்பட்ட சென்மதி நிலுவை, உலகில் தோன்றிவரும் பெரும் பின்னடைவின் காரணமாக அதன் போக்கு எதிர்வரும் ஆண்டுகளில் மெதுவானதாக அமையலாம். இறைத் தொழிற்பாடுகளின் விரிவாக்க விளைவு தேறிய வெளிநாட்டுவங்கிச் சொத்துக்களில் ஏற்பட்ட வளர்ச்சியுடன் இணைந்து விரும்பத்தக்க எல்லைக்குள் பணநிரம்பலைக்கட்டுப்படுத்தி வைத்திருப்பதை சிக்கலாக்கியது. இதன் விளைவாகவும், இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பாலும், பொருளாதாரத்தில் கணிசமானளவு பணவீக்கத்தாக்கம் நிலவியது. எனினும், தொழிலற்ற சிக்கல் குறைவடைந்ததுபோல் தெரிகிறது. இது குடும்ப உறுப்பினர்கட்கு மேலதிகமாக தொழில்கிடைத்தமையால் குடும்ப வருவாயில் ஏற்பட்ட அதிகரிப்பு விலைகளில் ஏற்பட்ட, மெதுவான அதிகரிப்பின் தாக்கங்களை குறைந்திருந்திருக்கலாம். இவைகள் பொருளாதார வளர்ச்சியில் உயர்ந்த வீதங்களை எய்துவதற்காக பெருமுயற்சி செய்யும் பொருளாதாரத்தின் ஒருவகையான சிக்கல்களாகும் எனவே பொருளாதாரத்தில் ஏற்புடையதொரு கொள்கைச் சூழ்நிலை இச்சிக்கலைத் தவிர்ப்பதற்குப் பெரிதும் துணைபுரிவதாக அமையும்.

## தேசிய உற்பத்தியும் வருவாயும்

1979ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொஉஉ) நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் ரூ. 491,250 இலட்சமென தற்காலிக மாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 22 சதவீதம் கொண்டதொரு வளர்ச்சியினைக் காட்டுகிறது. விலை அதிகரிப்புக்கள் நீங்கலாக நிலையான (1970) விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1979ஆம் ஆண்டில் ரூ. 185,010 இலட்சமாக அமைந்து 6.3 சதவீதம் கொண்டதொரு வளர்ச்சி வீதத்தினைக் காட்டுகிறது.

வெளிநாட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற தேறிய காரணி வருவாயினைக் கணக் கிலெடுக்குமிடத்து 1979ஆம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்தி (மொதேஉ) நடைமுறைக்காரணிச் செலவு விலை 22 சதவீதத்தால் உயர்வடைந்து ரூ. 488,850 இலட்சம் கொண்டதொரு வளர்ச்சியினைக் காட்டுகிறது. மீண்டும் விலை உயர்ச்சிகளை நீக்கிப்பார்க்குமிடத்து 1979ஆம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்தி நிலையான (1970) காரணிச் செலவு விலைகளில் 6.2 சதவீத உயர்ச் சியைக் காட்டுகிறது. விரிவான தரவுகள் புள்ளிவிபரப் பிடீணிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

1977ஆம் ஆண்டின் பொருளாதாரச் சீர்திருத்தங்கட்கு உடனடியாகவும், இயல்பாகவும் ஈடுகொடுத்து 1978ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க வகையில் 8.2 சதவீத வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்த இலங்கையின் பொருளாதாரம் 1979ஆம் ஆண்டில் ஓரளவிற்கு மெதுவான வளர்ச்சிப் போக்கினைக் காட்டியமை வெளிப்படையாகத் தோற்றினாலும் இது 1978 முதல் 1983 வரையுள்ள காலப் பகுதியில் எதிர்பார்க்கும் 6சதவீத வளர்ச்சிப் போக்கிலேயே அமைந்துள்ளது.

1979இன் நடு ஆண்டுக் குடித்தொகை தற்காலிகமாக 145 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2 சதவீத அதிகரிப்பினைக் காட்டுவதுடன், இலங்கையில் முன்பு நிலவிய போக்குகளுக்குச் சிறிது மாறாக இது அமைந் துள்ளது. இது தலைக்கு ரூ. 3,378 அல்லது ஐக்கிய அமெரிக்க டொலர் 217 கொண்டதொரு மொத்த தேசிய உற்பத்தியினை அளித்து 1979ஆம் ஆண்டில் 19.5 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பினைக் காட்டுகிறது.

1979ஆம் ஆண்டில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சிப் போக்கிற்குப் பல காரணிகள் ஏதுவாக இருந்தன. இவற்றில் மிகவும் குறிப்பிடத் தக்கது யாதெனில் வேளாண்மைத்துறையின் செயற்பாடு ஆகும். 1978ஆம் ஆண் டில் பெருந்தோட்ட வேளாண்மையின் செயற்பாடு சிறிது முன்னேற்றகரமாக காணப்பட்டபோதிலும் உள்நாட்டு வேளாண்மையின் செயற்பாடு சீரற்றதாகக் காணப்பட்டது. 1979ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி 1978 ஆம் ஆண்டின் வெளி யீட்டிலும் 1.4 சதவீதத்தால் உயர்வானதாகக் காணப்பட்டாலும் சிறு உணவுப் பயிர்களின் வெளியீடு குறிப்பாக கூல வகைகளின் (தானியம்) வெளியீடு 1978 மட்டங்களிலும் கணிசமானளவு குறைவாகக் காணப்பட்டது.

மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவகைப்படியான அமைப்பில் மிகவும் குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில் சுரங்கமறுத்தல், கட்டடவாக்கம், தயாரிப்பு, வர்த்தகம் ஆகிய துறைகளின் கூடிய முதன்மைத்தன்மையாகும். 1978இல் தொடங்கிய இப்போக்கு 1979 முழுவதும் தொடர்ந்து நிலவியது. தயாரிப்பு, கட்டடவாக்கம் ஆகியவற்றில் செய்யப்பட்ட முதலீடுகள் பற்றிக் கிடைக்கும் தா

22655
10 JUN 2009

வுகள் எதிர்காலத்தில் தொடர்ந்தும் இத்துறைகள் பெரும் வளர்ச்சித் துறைகளாக இருக்குமென்பதை எடுத்துக் காட்டுகின்றன. இது தொடர்பாக, வசிப்பதற்கும், வசிப்பதற்கு அல்லாததுமான கட்டடவாக்கங்கள் மீதும் விரைவுபடுத்தப்பட்ட மகாவலி செயற்றிட்டத்தின் மீதும் அரசு செய்துள்ள முதலீட்டை சிறப்பாக குறிப்பிடுதல் வேண்டும். இதுவரையில் வழங்கப்பட்டுள்ள ஒப்புதல்களை சீர்தூக்கிப் பார்க்குமிடத்து கொழும்புப் பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் (கொபெபொஆ) கைத்தொழில் ஊக்குவிப்பு வலயங்களில் (கைஊவ) உள்ள கைத்தொழில்களிலும் பொருளாதாரத்தின் ஏனைய துறைகளிலும் உயர்மட்டத்தில் முதலீடுகள் அமைதல் வேண்டும்.

பொருளாதாரத்தில் மேற்கொள்ளப்பட்ட தாராளமாக்கலின் ஒரு விளைவாக வர்த்தகத்துறையிலும் அதன் இணைந்த பணிகளிலும் உயர்மட்டத்தில் தொழிற்பாடுகள் நிலவின. ஒருவகையில் இது வரவேற்கத்தக்கதொரு அபிவிருத்தியாகும். ஏனெனில் இது தொழில் வாய்ப்பிலும் வருமானங்களிலும் அதிகரிப்பினை ஏற்படுத்துவதற்கு ஏதுவாயிற்று. எனினும், இறக்குமதி தொடர்பான வர்த்தகத்தில் ஏற்பட்ட 23 சதவீதம்கொண்டதொரு கணிசமானவளர்ச்சியினை நோக்குமிடத்து இறக்குமதி வர்த்தகத்தில் விரைவில் கூடிய இலாபங்களைப் பெறுவதற்காக மூலவளங்கள் ஆற்றுப்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதும் தெளிவாகிறது. அறுபதாம் ஆண்டுகளில் இறக்குமதி பதிலீட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த வர்த்தகர்கள் தற்பொழுது அவர்கள் இலாபமற்ற கைத்தொழில்களைக் கைவிட்டு, கூடிய இலாபம்தரும் இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளமை புலப்படுகிறது. மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவகைப்படியான உள்ளடக்கத்தில் வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில் துறையின் பங்கில் சிறிது வீழ்ச்சி காணப்படுவதற்கு பெருந்தோட்ட, உள்நாட்டு வேளாண்மையின் வளர்ச்சி மெதுவாக ஏற்பட்டமையே பெரிதும் காரணமாகும்.

1979ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சியின் பகுப்பாய்வு முன்னைய ஆண்டின் போக்குகளையே பெரிதும் வெளிப்படுத்துவதாக உள்ளது. 1979இல் வேளாண்மைத்துறையின் வெளியீடு 2 சதவீதத்தால் மிதமாக வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சி பெரிதும் 4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த பெருந்தோட்டத்துறையால் ஏற்பட்டதாகும். இது தேயிலை, தெங்கு ஆகியவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புக்களைக் காட்டுகிறது. உள்நாட்டு வேளாண்மையின் வெளியீடு 2 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்படுகிறது. நெல் உற்பத்தி 20 இலட்சம் மெற்றிக் தொன்களாக (920 இலட்சம் புசல்கள்) மதிப்பிடப்பட்ட வேளையில் சிறு உணவுப்பயிர்களின் உற்பத்தி கணிசமானளவு வீழ்ச்சியடைந்துள்ளது. ஏனைய உணவுப் பயிர்கள், காட்டுத்தொழில், கால்நடை ஆகியவற்றின் வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு 1978ஐவிட சிறிதளவே உயர்வானதாகும்.

கட்டட வாக்கம், தயாரிப்பு ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட உயர்ந்த முதலீடு இத்துறையில் பொருளாதார தொழிற்பாடுகளின் உயர்ந்த மட்டத்தில் நிலவுவதற்குத் துணைபுரிந்தது. 1979இல் கட்டடவாக்கத்துறையின் வெளியீடு 21 சதவீதத்தால் அதிகரித்தது. இதன் பெரும் பகுதி அரச துறையிலிருந்து குறிப்பாக விரைவுபடுத்தப்பட்ட மகாவலி செயற்றிட்டத்தின் கீழ் ஏற்பட்டது. கட்டடவாக்கத்தில் வரையறுக்கப்பட்ட மூலவளங்கட்கு போட்டி நிலவியது. இதன் காரணமாக தனிப்பட்ட முறையில் வீடுகட்டுவோர் இரண்டாவது இடத்தை சிறப்பாகப் பெற்றனர். இதனல் கட்டடப் பொருட்கள், குறிப்பாக

## நிலையான (1970) காரணிச் செலவுவிலைகளில் மொத்தத்

| துறைகள் | கூட்டப்பட்ட பெறுமதி (ரூபா பத்து இலட்சங்களில்) 1977 | 1978 | 1979 |
|---|---|---|---|
| 1. வேளாண்மை காட்டுத்தொழில் வேட்டையாடல், கடற்றேழில் ... | 4,299 | 4,532 | 4,623 |
| 1.1. வேளாண்மை ... | 3,977 | 4,176 | 4,240 |
| 1.1.1. தேயிலை .. | (416) | (398) | (412) |
| 1.1.2. இறப்பர் .. | (213) | (225) | (223) |
| 1.1.3. தெங்கு ... | (423) | (488) | (519) |
| 1.1.4. நெல் ... | (990) | (1116) | (1132) |
| 1.1.5. ஏனையவை ... | (1935) | (1949) | (1954) |
| 1.2. காட்டுத் தொழில் | 143 | 155 | 166 |
| 1.3. கடற்றொழில் ... | 179 | 201 | 217 |
| 2. சுரங்கத் தொழிலும், அகழ்வுத் தொழிலும் .. | 515 | 615 | 652 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 2,357 | 2,541 | 2,659 |
| 3.1. ஏற்றுமதி பதனிடல் ... | 823 | 840 | 877 |
| 3.2. தொழிற்கூட கைத்தொழில் .. | 1,227 | 1,362 | 1,417 |
| 3.3. சிறு கைத்தொழில்களும், ஏனையவையும் ... | 307 | 339 | 365 |
| 4. கட்டடவாக்கம் .. | 619 | 794 | 960 |
| 5. மின்வலு, வளி, நீர், இன்னோரன்ன ... | 131 | 158 | 190 |
| 6. போக்குவரத்து, தொடர்பூட்டல், இன்னோரன்ன ... | 1,498 | 1,607 | 1,716 |
| 7. வர்த்தகம் .. | 2,999 | 3,267 | 3,551 |
| 7.1. இறக்குமதிகள் .. | 513 | 702 | 864 |
| 7.2. ஏற்றுமதிகள் ... | 663 | 701 | 709 |
| 7.3. உள்நாட்டு ... | 1,823 | 1,864 | 1,942 |
| 8. வங்கித்தொழில், காப்புறுதி உண்மைச்சொத்து ... | 295 | 318 | 350 |
| 9. குடியிருப்புக்களின் உடமை .. | 475 | 499 | 518 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் ... | 791 | 854 | 905 |
| 11. பணிகள்வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை (வே.எ.கு.) ... | 2,099 | 2,212 | 2,378 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 16,078 | 17,401 | 18,501 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணிவருவாய் . | — 79 | — 90 | — 112 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி ... | 15,999 | 17,311 | 18,383 |

அட்டவணை 1.3

## தேசிய உற்பத்தியின் துறைவகைப்படியான உள்ளடக்கம்

| முன்னைய ஆண்டுக்கு மேலான உயர்ச்சி ரூபா பத்து இலட்சங்களில் | | | முன்னைய ஆண்டுக்கு மேலான சதவீத உயர்ச்சி | | | மொத்தத் தேசிய உற்பத்தியில் சதவீத பங்கு | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1977 | 1978 | 1979 | 1977 | 1978 | 1979 | 1977 | 1978 | 1979 |
| 405 | 233 | 91 | 10.4 | 5.4 | 2.0 | 26.9 | 26.2 | 25.1 |
| 406 | 199 | 64 | 11.4 | 5.0 | 1.5 | 24.9 | 24.1 | 23.1 |
| (24) | (–18) | (14) | (6.1) | (–4.3) | (3.5) | (2.6) | (2.3) | (2.2) |
| (–19) | (12) | (–2) | (–8.2) | (5.6) | (-0.1) | (1.3) | (1.3) | (1.2) |
| (–32) | (65) | (31) | (–7.0) | (15.4) | (6.3) | (2.6) | (2.8) | (2.8) |
| (270) | (126) | (16) | (37.5) | (12,7) | (1.4) | (6.2) | (6.4) | (6.2) |
| (173) | (14) | (5) | (9.2) | (0.7) | (00.0) | (12.1) | (11.3) | (10.6) |
| –10 | 12 | 11 | –6.5 | 8.4 | 7.1 | 0.9 | 0.9 | 0.9 |
| 9 | 22 | 16 | 5.3 | 12.3 | 7.9 | 1.1 | 1.2 | 1.1 |
| –56 | 100 | 37 | 9.8 | 19.4 | 6.0 | 3.2 | 3.6 | 3.5 |
| –14 | 184 | 118 | –0.1 | 7.8 | 4.6 | 14.7 | 14.7 | 14.5 |
| –37 | 17 | 37 | –4.5 | 2.1 | 4.4 | 5.1 | 4.9 | 4.8 |
| 13 | 135 | 55 | 1.1 | 11.0 | 4.0 | 7,7 | 7.9 | 7.7 |
| 9 | 32 | 26 | 3.0 | 10.4 | 7.7 | 1.9 | 2.0 | 2.0 |
| –66 | 175 | 166 | 9.6 | 26.3 | 20.9 | 3.9 | 4.6 | 5.2 |
| 9 | 27 | 32 | 7.4 | 20.6 | 20.2 | 0.8 | 0.9 | 1.0 |
| 73 | 109 | 109 | 5.1 | 7.3 | 6.8 | 9.3 | 9.3 | 9.3 |
| 71 | 268 | 284 | 2.4 | 8.9 | 8.7 | 18.7 | 18.9 | 19.3 |
| 113 | 189 | 162 | 28.3 | 36.8 | 23.1 | 3.2 | 4.1 | 4.7 |
| – 53 | 38 | 8 | –7.4 | 5.7 | 1.1 | 4.1 | 4.1 | 3.9 |
| 11 | 41 | 78 | 0.6 | 2.2 | 4.2 | 11.4 | 10.8 | 10.6 |
| 49 | 23 | 32 | 19.9 | 7.8 | 10.1 | 1.8 | 1.8 | 1.9 |
| 8 | 24 | 19 | 1.7 | 5.0 | 3.8 | 3.0 | 2.9 | 2.8 |
| 31 | 63 | 51 | 4.1 | 8.0 | 6.0 | 4.9 | 4.9 | 4.9 |
| 137 | 113 | 166 | 7.0 | 5.4 | 7.5 | 13.1 | 12.8 | 12.9 |
| 647 | 1,323 | 1,100 | 4.2 | 8.2 | 6.3 | 100.5 | 100.5 | 100.6 |
| – 7 | 11 | 22 | — | — | — | –0.5 | –0.5 | –0.6 |
| 654 | 1,312 | 1,078 | 4.3 | 8.2 | 6.2 | 100.0 | 100.0 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சீமெந்து, வன்கல விடயங்கள், முன்னைய ஆண்டிலும் கூடுதலாக உள்ளூரில் கிடைக்கக்கூடியதாக இருந்தபோதிலும் சந்தையில் தட்டுப்பாடுகள் நிலவியதுடன் அரசின் கட்டடவாக்க நிகழ்ச்சித் திட்டங்களுக்கே வழங்கலில் முன்னுரிமை கொடுக்கப்பட்டது, இதன்காரணமாக பயிற்சிபெற்ற, பயிற்சியற்ற தொழிலாளர்கள் ஒருவகையில் நிலையான தொழில்வாய்ப்பினை நல்கக்கூடிய பெரும் கட்டடவாக்க செயற்றிட்டங்களை நோக்கி ஈர்க்கப்பட்டனர். இது ஒரு வகையில் வீடுகட்டுவதிலீடுபட்டிருந்த தனியார்துறையில் கட்டடவாக்கத் தொழிற்பாடு பாதிப்படைந்ததுபோல் தோற்றுகிறது.

1978இல் 8 சதவீதத்தால் உயர்வடைந்திருந்த தயாரிப்புத்துறையின் வெளியீடு 1979இல் மேலும் 5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சியின் கணிசமான பகுதி ஏற்றுமதி பதனிடல் சிறு கைத்தொழில்களிலிருந்து ஏற்பட்ட வேளையில் மொத்தத்தில் அரசதுறை அதன் உற்பத்தி மட்டங்களை முன்னைய ஆண்டு மட்டத்தில் பேணக் கூடியதாக இருந்தது.

1979இல் பணிகள்துறையில் பொருளாதாரத் தொழிற்பாடுகள் உயர்வாகவே இருந்தது. கட்டடவாக்கத்திலும், தயாரிப்பிலும் ஏற்பட்ட உயர் மட்ட உற்பத்தியாக்கமும், அத்துடன் கட்டடவாக்கம் தொடர்பான கைத்தொழில்களில் ஏற்பட்ட உற்பத்தியாக்கமும் கட்டடவாக்கக் கைத்தொழில் பொருட்களுக்கு பெருங்கேள்வியினை ஏற்படுத்தியது. இறக்குமதி தாராளமாக்கலின் பின்னர்இறக்குமதி செய்யப்பட்ட சரக்கு வண்டிகள் பெருமளவில் கிடைக்கக்கூடியதாக இருந்ததன் காரணமாக 1979இல் போக்குவரத்துத்துறை 7 சதவீதங்கொண்டதொரு குறிப்பிடத்தக்க வளர்ச்சிவீதத்தைப் பதிவுசெய்தது. பெருமளவில் இறக்குமதிகள் செய்யப்பட்டதன் காரணமாக மொத்த விற்பனை, சில்லறை வர்த்தகம் ஆகியவற்றின் தொழிற்பாடுகள் விறுவிறுப்பு பெற்றதுடன் 1979இல் 9 சதவீதத்தில் வளர்ச்சியடைந்திருக்குமென மதிப்பிடப்படுகிறது.

1977இல் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள், பன்னாட்டு வர்த்தகத்தின் மீது பொருளாதாரம் தங்கியிருக்கும் தன்மையைக் கூட்டியது. இதன் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகாலமாக வங்கித் தொழில், நிதியிடல், பணிகள் ஆகிய துறையில் குறிப்பிடத்தக்கதொரு விரிவாக்கம் காணப்பட்டது. மேலும், இடைநிலைத் துறைகளிலும் குறிப்பாக, இறக்குமதி, பயணமுகவர் தொழில்களில் அதிகரிப்புக்கள் காணப்பட்டன. சுற்றுலாவினால் ஏற்பட்ட கூடிய முதன்மை, துணை விளைவுகளை உணவகங்கள், தேநீர்விடுதிகள், போக்குவரத்துப்பணிகள் ஆகியவற்றில் நிலவிய கேள்வி எடுத்துக்காட்டுவதாக உள்ளது. மொத்தத்தில் வங்கித்தொழில் நிதியிடல்துறை ஆகியவற்றின் வெளியீடு 1979இல் 10 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் பணிகள் துறையின் வெளியீடு 8 சதவீதத்தால் அதிகரித்தது.

**மூலவளங்களும் பயன்பாடுகளும்**

1979 இல் இலங்கையின் பொருளாதாரத்திற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் இறக்குமதிகளையும் உள்ளடக்கிக் கிடைக்கக்கூடியதாக இருந்த மொத்த மூலவளங்கள் ரூ 764,460 இலட்சமாகும். இது 1978ஐக்காட்டிலும் 30 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். உண்மையான நியதிகளில் அளவிடுமிடத்து சென்றவாண்டு வீதத்தின் அளவிலேயே இவ்வாண்டு மொத்த மூலவளங்கள் 11 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதற்கு 1978 இல் மொத்த

மூலவளங்களில் இறக்குமதிகளின் அளவு 29 சதவீதத்திலிருந்து 1979இல் 32 சதவீதத்திற்கு அதிகரித்தமையே பெரிதும் காரணமாகும்.

அட்டவணை 1.4

## மூலவளங்களின் உள்ளடக்கமும் பயன்பாடும் - 1978 – 1979

| வகுப்பு | 1978 நடைமுறை விலைகளில் | | 1979 நடைமுறை விலைகளில் | | 1979, 1978 இன் விலைகளில் | | 1978ற்கு மேலாக 1979ன் சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ரூ.ப.இ. | % | தொகை ரூ.ப.இ. | % | தொகை ரூ.ப.இ. | % | |
| 1. மொத்த மூலவளங்கள் ... | 58,877 | 100 | 76,446 | 100 | 65,403 | 100 | 11 |
| 1.1 மொ.உ.உ. சந்தை விலைகளில் ... | 42,005 | 71 | 52,447 | 69 | 44,651 | 68 | 6 |
| 1.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதிகள் ... | 16,872 | 29 | 23,969 | 31 | 20,752 | 32 | 23 |
| 2. பயன்பாடு ... | 58,877 | 100 | 76,446 | 100 | 65,403 | 100 | 11 |
| 2.1 நுகர்வு ... | 35,488 | 60 | 45,259 | 59 | 39,728 | 61 | 12 |
| 2.2 மொத்த நிலையான உள்நாட்டு மூலதன ஆக்கம் ... | 8,521 | 15 | 13,246 | 17 | 10,568 | 16 | 24 |
| 2.2.1. அரசு ... | (3,077) | (6) | (3,809) | (5) | (3,630) | (5) | (18) |
| 2.2.2. அரச கூட்டுத்தாபனங்கள் ... | (2,056) | (3) | | | | | |
| 2.2.3. தனியார் துறை ... | (3,388) | (6) | (9,437) | (12) | (6,938) | (11) | (27) |
| 2.3. இருப்புக்கள் ... | 33 | — | 281 | — | 124 | — | — |
| 2.4. பொருட்கள் பணிகள் ஏற்றுமதிகள் ... | 14,835 | 25 | 17,660 | 24 | 14,983 | 23 | 1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கிடைக்கக்கூடிய மூலவளங்களின் பங்கீடு பற்றிய பகுப்பாய்வு, பணத்தின் பெறுமதியில் நுகர்வு 28 சதவீதத்தாலும், மூலதன ஆக்கம் 55 சத வீதத்தாலும், அதிகரித்துள்ளமையைக் காட்டுகிறது. உண்மை நியதிகளில் அளவிடுமிடத்து நுகர்வு 12 சதவீதத்தாலும், மூலதன ஆக்கம் 24 சதவீதத்தாலும், அதிகரித்துள்ளது மொத்த மூலவளப்பயன்பாட்டில் மூலதன ஆக்கத்தின் பங்கு 1978இன் 15 சதவீதத்திலிருந்து 1979 இல் 16 சதவீதத்திற்கு அதிகரித்திருக்க, மொத்த மூலவளங்களில் நுகர்வின்பங்கு 60 சதவீதத்திலிருந்து 61 சதவீதமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் ஏற்றுமதிகளின் பங்கு 25 சதவீதத்திலிருந்து 23 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அட்டவணை 1.5

## உள்நாட்டுச் சேமிப்பு 1977 - 1979

ரூபா பத்து இலட்சங்களில்

| விடயம் | 1977 | 1978 | 1979 |
|---|---|---|---|
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 36,051 | 42,005 | 52,477 |
| 2. வெளிநாட்டு மூலவளங்கள் (பொருட்கள் பணிகள் ஆகியவற்றின் இறக்குமதி நீங்கலாக) ... | —1,079 | 2,274 | 6,549 |
| 3. முதலீடு ... | 5,259 | 8,554 | 13,527 |
| 4. உள்நாட்டுச் சேமிப்பு (3-2) ... | 6,338 | 6,280 | 6,978 |
| 5. சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 4) .. | 17·6 | 15.0 | 13.3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

33654

தற்காலிகத் தரவுகளின்படி உள்நாட்டுச் சேமிப்புக்கள் 1978 இன் ரூ. 62, 800 இலட்சத்துடன் ஒப்பிடுமிடத்து 1979 இல் 69,780 இலட்சமாகும். எனினும் மொத்தத் தேசிய உற்பத்தியின் சதவீதமாகக் கணிக்குமிடத்து சேமிப்புக்கள் 15 சதவீதத்திலிருந்து 1979இல் 13 சதவீதமாக குறிப்பிடத்தக்க வகையில் வீழ்ச்சியடைந்தது. இவ் வீழ்ச்சி உண்மையான வருவாயில் ஏற்பட்ட மாற்றங்கட்கு நுகர்வினை சீராக்கப்படுவதன் வாயிலாக தெளிவாகிறது. மறு சொல்லில், ஒரு பண வீக்க நிலைமையில் வருவாயில் செலவிடுவதற்கான பெரும்பங்கு சேமிப்புக்களை மேற்கொள்ளாது நுகர்வில் செலவிடப்பட்டுள்ளது. சேமிப்பு விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பங்களித்த இன்னுமொரு காரணியாக புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டமையால் இது மக்களின் வருவாய்களை அதிகரித்தாலும், வருவாய்களின் பெரும்பங்கு நுகர்வுக்கே செலவழிக்கப்பட்டது. புள்ளி விபரப்பின்னிணைப்பிலுள்ள நீண்டகாலச் சேமிப்புக்கள் பற்றியதரவுகள் குறைந்த வீதத்தில் சேமிப்புகள் இருந்தமையை எடுத்துக்காட்டினலும் இது எழுபதின் நடுப்பகுதியில் காணப்பட்டதிலும் இன்னும் உயர்வாகவே உள்ளமையைக் காட்டுகிறது.

இவ்வாறுன முடிவுக்குப் பல காரணங்கள் உள. ஏனெனில் கடந்த சில ஆண்டுகளாக மேற் கொள்ளப்பட்ட சேமிப்புக்கள் பற்றிய மதிப்பீடு, உள்ளடக்கப்பட்ட பட்டியல்களின் பெறுமதியினை குறைத்து மதிப்பிடுவதாக உள்ளது. இது இறக்குமதி தாராளமாக்கலின் பின்னர் குறிப்பாக முதன்மைத் தன்மையைப் பெறுகிறது. ஏனெனில் தாராளமாக்கலின் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட இடைநிலை, நுகர்வுப் பொருட்களின் பெரும் அளவுகளின் காரணமாக 1979 ஆம் ஆண்டில் அரசதுறையின் பட்டியல்கள் பெரும்பாலும் மூன்று மடங்காக உயர்வடைந்துள்ளது. இது, முன்னர் எடுத்துரைக்கப்பட்ட பகுப்பாய்விளுல் உறுதியாகிறது. தனியார்துறையின் பட்டியல் வளர்ச்சியினை சரியான முறையில் மதிப்பீடு செய்து கணிக்கப்படின் 1979 ஆம் ஆண்டின் சேமிப்பு விகிதம் 1978 ஆம் ஆண்டின் மட்டத்திற்கு உயர்வடையும்.

1979 ஆம் ஆண்டில் ஊக்குவிக்கத்தக்கவகையில் மூலதன ஆக்கத்தில் காணப்பட்ட வளர்ச்சி, உள்நாட்டு சேமிப்பின் நிலையானதொரு விகிதத்தின் பின்னணியில் முதலீட்டுக்கு 1979 ஆம் ஆண்டில் உயர்ந்தளவில் வெளிநாட்டு மூலவளங்கள் பயன்படுத்தப்பட்டமையை தெளிவுபடுத்துகிறது. 1979 இல் முதலீட்டின் மூன்றில் இரண்டு பகுதி அரச துறையில் ஏற்பட்டது. இதனை 1978 இன் 60 சதவீதத்துடன் ஒப்புநோக்கலாம்.

## வேளாண்மை

கிடைக்கத்தக்க பிந்திய தரவுகளின்படி, 1979 இல் வேளாண்மைத்துறையின் செயலாற்றப் எதிர்பார்த்தவாறு அமையவில்லை. மரப்பயிர்களில் தெங்கு உற்பத்தி 1977 இல் இருந்த ஆகக்குறைந்த மட்டத்திலிருந்து மீட்சி பெற்றது, விலைகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் காணப்பட்ட நிலையிலும் இறப்பருற்பத்தி ஏறக்குறைய 2 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1978 இலிருந்து விலைகள் வீழ்ச்சி அடைந்து சென்ற நிலையிலும் தேயிலை உற்பத்தி சிறிதளவில் அதிகரித்தது. சிறு ஏற்றுமதிப் பயிர்கள் சமனற்ற முறையில் அமைந்து, கறுவா. கராம்பு. கோப்பி, ஏலம் ஆகியவற்றின் ஏற்றுமதி அதிகரித்தும், கொக்கோ, மிளகு, பப்பாளிப்பால் ஆகியவற்றின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தும் காணப்பட்டன. ஆண்டுப் பயிர்களில், நெல் உற்பத்தி சிறிதளவில் அதிகரித்